## பொங்கல் திருநாளையொட்டி – இலவச வேட்டி - சேலைகள் மற்றும்

# பொங்கல் தொகுப்பு: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

### சைதையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 10 -**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2,20,94,585 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும் பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும் இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள், 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகள் வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.**

“பொங்கலோ பொங்கல்” என்று சொல்லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. தமிழர் தம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாக தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா “1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும்” என்று அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு இலவச வேட்டிசேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சைதாப்பேட்டை, சின்னமலையில் அமைந்துள்ள நியாயவிலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி - சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தின் மூலம், 249.76 கோடி ரூபாய் செலவில் 2,20,94,585 அரிசி குடும்ப அட்டைதாரர்களும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களும் பயன்பெறுவார்கள்.

மேலும், பொங்கல் திருநாளையொட்டி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 77 இலட்சத்து 22 ஆயிரம் எண்ணிக்கையிலான வேட்டிகள் மற்றும் 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் எண்ணிக்கையிலான சேலைகள் நியாய விலைக் கடைகள் மூலம் பொங்கல் தொகுப்புடன் வழங்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 37,224 நியாய விலைக்கடைகளில் நேற்று (9.1.2025) முதல் 13.1.2025 வரை பொங்கல் பரிசுத்தொகுப்பு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணிக்கு கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் கைத்தறித்துறையைச் சேர்ந்த சுமார் 50,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்பு வழங்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு. மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே.அமுதவல்லி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் ந.சுப்பையன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சைதாப்பேட்டை, சின்னமலையில் அமைந்துள்ள நியாயவிலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி–சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் அறிவித்த – ரூ.8 ஆயிரம் கோடி மதிப்பிலான

# ஒகேனக்கல் 2வது கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஜீன் மாதம் தொடங்கப்படும்!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

**சென்னை, ஜன. 10 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது, உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, “முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ரூ.8 ஆயிரம் கோடி மதிப்பிலான ஒனேக்கல் 2வது கூட்டுக் குடிநீர்த் திட்டம், வருகிற ஜீன் மாதம் தொடங்கப்படும்” என அறிவித்தார்.**



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஒய்.பிரகாஷ்:** ஓசூர் மாநகராட்சி ஆனந்த நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு:** ஓசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 5, ஆனந்த நகரில், தற்போது 3 ஆழ்துளைக் கிணறுகளின் மூலமாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ரூ.7,955.00 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், ஓசூர் மாநகராட்சி, ஆனந்த நகரில் 2.20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, குடிநீர் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2028 ஆம் ஆண்டு முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது .

**ஒய்.பிரகாஷ்:** என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் மாநகராட்சியில் வார்டு எண் 4, 5, 6 ஆகிய பகுதிகள் மேடான பகுதிகளாக உள்ள காரணத்தால், அங்கே குடிநீர் செல்வதற்கு சற்று சிரமமாக உள்ளது. அதனால், வார்டு எண் 4, 5, 6 ஆகியவற்றில், ஆனந்த் நகர், பாலாஜி நகர் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தந்தால் அப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். அங்கே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடமும் உள்ளது. ஆகவே, அமைச்சர் அவர்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தருவாரா?

**அமைச்சர் கே.என்.நேரு:** முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதுதான், ஜப்பான் பன்னாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்-1-ஐ நம்முடைய தளபதி அவர்கள் துவங்கி வைத்து, தலைவர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதன் மூலம் தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகிய 2 மாவட்டங்களுக்கும் தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், 120 MLD என்ற அளவிலேதான் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. 2030 ஆம் ஆண்டு 130 MLD குடிநீர் வழங்கவேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம். ஆனால், இப்போதே 130 MLD-க்கு மேலாக குடிநீர் வழங்கப்பட்டும்கூட பல கிராமங்களுக்கு குடிநீர் பற்றாக்குறையாக உள்ள காரணத்தால், முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ண கிரி மற்றும் தருமபுரிக்குச் சென்றிருந்தபோது, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, மீண்டும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்-2-வது திட்டத்தை, சுமார் 8,000 கோடி ரூபாய் செலவில் அறிவித்தார்கள். விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டுவிட்டது. நிதிக்காக JICA நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தபோது, ஜீன் மாதம் அந்த நிதியைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, வருகிற ஜீன் மாதத்தில் நிதி வந்தவுடன், உடனடியாக அந்தத் திட்டம் துவங்கப்படுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

இப்போது வரக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது, ஒகேனக்கல்லில் தண்ணீர் எடுக்கிற source இடத்திலிருந்து, ஓசூர் செல்கிற பகுதி, சுமார் 60 அடிக்கும் மேல் உயரமான பகுதி என்கிற காரணத்தால், பல இடங்களில் புதிய நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் pumping station ஆகியவை அமைக்கப்பட்டு, தண்ணீர் சரியாக செல்கிறவகையில் திட்டமிடப்பட்டுள்ளது. ஓசூர் நகம் முழுவதும் இப்போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஓசூர் மாநகராட்சியின் மக்கள் தொகை 2,45,354. தற்போதைய மக்கள் தொகை 3,79,720. ஓசூர் மாநகராட்சியில் 45 வார்டுகள் உள்ளன. 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, தண்ணீர் எடுக்கப்பட்டு 13 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாநகரின் ஒரு நாள் தேவை என்பது 35 MLD ஆக உள்ளது. எனவேதான், புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, விரைவில் அந்தத் திட்டம் துவங்கப்பட்டு, ஓசூர் மாநகராட்சி முழுவதற்கும் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்படும்

ஓசூர் மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஓசூர் மாநகராட்சி புதிதாகத் தரமுயர்த்தப்பட்டது. அந்த மாநகராட்சியானது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நான்கு மண்டலங்களுக்கும் இன்னும் மண்டல அலுவலகங்கள் இல்லாத காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அந்த 4 மண்டலங்களுக்கும் மண்டல அலுவலகங்கள் கட்டித் தர வேண்டும் பொதுமக்கள் ஏதாவது கோரிக்கைகள் கொடுக்க வேண்டுமென்றால் மாநகராட்சிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தந்த பகுதியில் ஒரு மண்டல அலுவலகம் கட்டினால் கண்டிப்பாக பொதுமக்கள் அந்தப் பகுதியில் உள்ள அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**தன்னிறைவு பெற்ற மாநகராட்சி!**

**அமைச்சர் கே.என். நேரு:** முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஓசூர் மாநகராட்சிக்கு கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இப்போது, கடந்த வாரம் கூட ரூபாய் 547 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் அங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நான் இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், நான்கு மண்டல அலுவலகங்கள் மட்டுமல்ல, ஓசூரில் புதிய பேருந்து நிலையம் ஒன்றையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் புதிய பேருந்து நிலையம் மட்டுமல்ல, அங்கே மார்க்கெட் வழங்கப்பட்டிருக்கிறது; சாலைகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன. எனவே, ஓசூரை தன்னிறைவு பெற்ற மாநகராட்சியாக உருவாக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். நீங்கள் கேட்ட இந்த 4 மண்டல அலுவலகங்கள் மட்டுமல்ல, தொடர்ந்து ஓசூருடைய தேவையை அறிந்து நிச்சயமாக இந்த அரசு நல்ல முன்னேற்பாடுகளை செய்து தரும்.

அதுமட்டுமல்ல, கிருஷ்ணகிரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கிருஷ்ணகிரியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதிய திட்டங்களாக 21 திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதில், 85.56 MLD தண்ணீர் வழங்கப்பட வேண்டும். இன்றைக்கு 6 குடிநீர்த் திட்டங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு ரூபாய் 117 கோடி 57 இலட்சம் செலவில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் 6.57 MLD தண்ணீர் தருகிற வகையில், திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த எண்ணேகொல் மற்றும் 122 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஒன்றியத்தைச் சேர்ந்த நாகொண்டபள்ளி மற்றும் 27 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இராயக்கோட்டை மற்றும் 28 ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒன்றியத்தைச் சேர்ந்த வெலகலஹள்ளி மற்றும் 39 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிகரலப்பள்ளி மற்றும் 143 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்கள் அனைத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மூன்று ஆண்டு காலத்தில் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன; தண்ணீரும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதுவும் பற்றாக்குறை என்ற காரணத்தினால் தான், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 2-வது திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 4, 8–இல் எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 10.01.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | 4 | தருமபுரி | செங்குந்தர் திருமண மண்டபம், குமாரசாமிப்பேட்டை, தருமபுரி. |
| | மாலை 3.00 மணி | | பென்னாகரம் | மல்லிகா திருமண மஹால், பென்னாகரம். |
| 11.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | கோபிசெட்டிப்பாளையம் | இராமயம்மாள் திருமண மண்டபம், கோபிசெட்டிப்பாளையம். |
| | மாலை 3.00 மணி | | பவானிசாகர் | கவரா மஹால், சத்தி – அத்தாணி சாலை, சத்தியமங்கலம். |
| 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | பவானி | பாவா திருமண மண்டபம், கவுந்தப்பாடி, பவானி |
| | மாலை 3.00 மணி | | அந்தியூர் | எஸ்.எம்.பி. திருமண மண்டபம், அத்தாணி, அந்தியூர் |
| | காலை 10.00 மணி | 8 | முதுகுளத்தூர் | ஸ்ரீ சர்வ விநாயகா சாய் மஹால், முதுகுளத்தூர். |
| | மாலை 3.00 மணி | | பரமக்குடி | ஏ.பி.ஷா. மஹால், உலகநாதபுரம், பரமக்குடி. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 08-01-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல் திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் த.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.